## தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சீபுரம்

**முன்னிலை. திருP.சிவஞானம், எம்.ஏ., எம்.எல்.,**
**தலைமை தாங்கும் அலுவலர்,**
**காஞ்சீபுரம்.**

2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13ம் நாள் வியாழக்கிழமை

**I.A.No.02/2023**
**IN**
**I.D.No.149/2021**

ஒன்றுபட்ட தொழிலாளர் கூட்டமைப்பு,
பதிவு எண். 2657/CNI
அதன் பிரதிநிதியாக செயலாளர்,
எண்.149, தம்புசெட்டி தெரு,
C.J.காம்பளெக்ஸ்,4வது புளோர்,
சென்னை - 600 001. ...... மனுதாரர்/ மனுதாரர்

/எதிராக/

நிர்வாகம்,
தேபு ஆட்டோமோட்டிவ் சீட்ஸ் இந்தியா
பிரைவேட் லிமிடெட்,
எண்.492, மண்ணூர் கிராமம்,
வளர்புரம் அஞ்சல்,
திருப்பெரும்பத்தூர் தாலுகா,
காஞ்சிபுரம் மாவட்டம். 602 105. ...... எதிர்மனுதாரர்/ எதிர்மனுதாரர்

இம்மனு கடந்த 26.06.2023 அன்று இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றத்தில் வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.T.ராம்குமார், திரு.K.சுடலைகண்ணு, திருமதி.A.ரேகா மற்றும் திருமதி.V.நிர்மலா ஆகியோர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.M.R.ராகவன் மற்றும் திரு.P.அசோக்குமார் ஆகியோர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு ஆவணங்களை பரிசீலனை செய்த பின் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

1. மனுதாரரால் 11.11.2022 தேதியில் I.D.No.149/2021 என்ற வழக்கில் அளித்த ஒருதலைபட்சமாக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்ய கோரி தொழிற்தகராறு சட்டப்பிரிவு 11(3) விதி 48(2) உ/இ கட்டளை 9 விதி 7 CPC- ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனு பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம்**

மனுதாரர் தொழிற்சங்கம் எதிர்மனுதாரர் மீது தொழிற்தகராறு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் தொழிலாளர்கள் தன்ராஜ், பெலிக்ஸ்ராஜ் மற்றும் சந்தோஸ்குமார் ஆகிய மூவரை சட்டத்திற்கு புறம்பான வகையில் பணி நீக்கம் செய்யப்பட்ட நிலையில் அந்த பணி நீக்கத்தை ரத்து செய்ய வேண்டுமென்று இந்த தொழிற்தகராறு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இதில் மனுதாரர் தொழிற்சங்கத்தின் சார்பில் கோரிக்கை மனுவை தாக்கல் செய்ய 16.12.2022 அன்று காலஅவகாசம் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் மனுதாரர் தன்னுடைய வழக்கறிஞருக்கு வழக்கு சம்மந்தமான முக்கிய விவரங்களை உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் தெரிவிக்கவில்லை. இந்த காரணத்திற்காக வழக்கறிஞர் கோரிக்கை மனுவை தாக்கல் செய்யவில்லை. அதனால் 11.11.2022 தேதியில் மனுதாரர் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டார். ஒருதலைபட்ச உத்தரவை நீக்கப்பட வேண்டுமென்று இந்த மனுவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனால் இம்மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

3. **எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்**

இம்மனு நிலைக்கக்கூடியதாக இல்லை. ஏற்கனவே 11.11.2022 தேதியில் மனுதாரர் ஒருதலைபட்சமாக்கப்பட்ட நிலையில் இந்த மனு 17.04.2023 தேதியில் தான் தமிழ்நாடு தொழிற்தகராறு விதி 34(11)-ல் குறிப்பிட்டுள்ள காலஅவகாசம் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. காலஅவகாசம் கடந்த நிலையில் காலதாமதத்தை மன்னிக்க வேண்டுமென்று தனியாக மனு தாக்கல் செய்யவில்லை. அதே போல் முக்கிய வழக்கில் கோரிக்கை மனு தாக்கல் செய்யப்படவில்லை என்பதற்காக ஒருதலைபட்சமாக்கப்பட்ட நிலையில் இந்த இடைக்கால மனுவுடன் முக்கிய வழக்கில் தாக்கல் செய்ய வேண்டிய

கோரிக்கை மனுவை இணைத்து தாக்கல் செய்யப்படவில்லை. அதன் காரணமாகவும் இம்மனு நிலைக்கக்கூடியதாக இல்லை. 3 தொழிலாளர்கள் சம்மந்தமாக தொழிற்தகராறு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் தனி நபர் தான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.தொழிற்சங்கத்தின் செயலாளர் தாக்கல் செய்துள்ள இந்த இடைக்கால மனுவில் அவருக்கு உடல்நிலை சரியில்லை என்ற காரணத்திற்காக வழக்கறிஞரை சந்தித்து வழக்குக்கான தகவலை தெரிவிக்க இயலவில்லை என்ற காரணம் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருப்பதால் இந்த மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. **மனுதாரர் கோரியவாறு இம்மனு அனுமதிக்கக்கூடியதா ?**

**<u>தீர்வு</u>**

5. இரு தரப்பும் கேட்கப்பட்டது. மனுதாரர் தொழிற்சங்கம் எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு எதிராக தொழிற்தாவா மனுவை ஸ்ரீபெரும்புதூர் தொழிலாளர் துணை ஆணையர் முன்பு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் தன்ராஜ், பெலிக்ஸ்ராஜ் மற்றும் சந்தோஸ்குமார் ஆகிய மூன்று தொழிலாளர்களுக்கும் எந்தவித விளக்கமும் இல்லாமல் குற்றச்சாட்டும் இல்லாமல் வாய்மொழியாக பணி நீக்கம் செய்யப்பட்ட உத்தரவை ரத்து செய்யப்பட வேண்டுமென்றும் மீண்டும் அவர்களுக்கு பணி வழங்க வேண்டுமென்று நிர்வாகத்திற்கு எதிராக அந்த தொழிற்தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தொழிற்தாவாவில் சமரச அலுவலர் நடத்திய பேச்சுவார்த்தையில் சமரசம் ஏற்படாத காரணத்தினால் முறிவு அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் அரசாணை வெளியிடப்பட்டு தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? என்று தீர்வு காண்பதற்காக இந்நீதிமன்றத்திற்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

6. இந்த வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட பிறகு இருதரப்புக்கும் அழைப்பாணை அனுப்பப்பட்டு கோரிக்கை மனு மற்றும் பதில்வழக்குரை தாக்கல் செய்ய காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதில் மனுதாரர் தரப்பிற்கு பலமுறை காலஅவகாசம் வழங்கிய பிறகும்

கோரிக்கை மனு தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் 11.11.2022 தேதியில் அழைத்தும் ஆஜரின்மையால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார். அதன் பிறகு எதிர்மனுதாரர் தரப்பில் அசல் வழக்கில் பதில்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர் அசல் வழக்கில் ஒருதலைபட்சமாக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்யப்பட வேண்டுமென்று கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். தொழிற்சங்கத்தின் செயலாளர் இந்த மனுவிற்கான பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளார். அவருக்கு உடல்நிலை சரியில்லை என்ற காரணத்தினால் கோரிக்கை மனு தயாரிப்பதற்காக வழக்கில் தெரிவிக்கப்பட வேண்டிய தகவலை வழக்கறிஞரிடம் தெரிவிக்க இயலவில்லை என்றும் உரிய காலத்திற்குள் கோரிக்கை மனுவை தயாரித்து தாக்கல் செய்ய இயலவில்லை என்று தெரிவித்துள்ளார்.

7. எதிர்மனுதாரர் தரப்பில் செய்யப்பட்ட ஆட்சேபனையில் தமிழ்நாடு தொழிற்தகராறு விதி 34(11)ன்படி ஒருதலைபட்ச உத்தரவிட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் அந்த உத்தரவை ரத்து செய்ய மனு தாக்கல் செய்யப்பட வேண்டுமென்றும் ஆனால் கடந்த 11.11.2022 தேதியில் அளிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யப்பட வேண்டுமென்று உரிய காலத்திற்குள் மனு தாக்கல் செய்யவில்லை. இந்த மனு 17.04.2023 தேதியில் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு காலதாமதம் ஏற்பட்டதற்காண காரணத்தை தெரிவித்து அதற்கான தனியாக காலதாமதத்திற்கு மன்னிப்பு கேட்டு மனு தாக்கல் செய்யப்படவில்லை என்றும் அதே போல் வழக்கில் கோரிக்கை மனு தாக்கல் செய்யவில்லை என்பதற்காக ஒருதலைபட்சமாக்கப்பட்ட நிலையில் இந்த மனுவுடன் அசல் வழக்கில் தாக்கல் செய்ய வேண்டிய கோரிக்கை மனு இணைக்கவில்லை என்று ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

8. இந்த வழக்கு ஆவணங்களை பரிசீலிக்கையில் இந்த இடைக்கால மனு கடந்த 17.04.2023 தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இத்துடன் கோரிக்கை மனுவினை இணைக்கவில்லை. அதன் பிறகு மனு நிலுவையில் தான் உள்ள போது 26.06.2023 தேதியில் அசல் வழக்கில் தாக்கல் செய்ய வேண்டிய கோரிக்கை மனு மனுதாரர் தரப்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனால் எதிர்மனுதாரர் தரப்பில்

கூறப்படுவது போல் மனுதாரர் அசல்வழக்கில் தாக்கல் செய்ய வேண்டிய கோரிக்கை மனுவை இன்னும் தாக்கல் செய்யவில்லை என்ற கூற்று சரி அல்ல.

9) 11.11.2023 தேதியில் மனுதாரர் ஒருதலைபட்சமாக்கப்பட்டு உத்தரவு செய்யப்பட்ட நிலையில் காலவரையறை கடந்து இந்த மனு தாக்கல் செய்துள்ளதால் நிலைக்கக்கூடியதாக இல்லை என்று ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழிற்தகராறு விதி 34(11)ன்படி Exparte ஆக இறுதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தால் அந்த Exparte இறுதி உத்தரவை ரத்து செய்ய வேண்மென்று 15 நாட்களுக்குள் மனுதாரர் தாக்கல் செய்யப்பட வேண்டுமென்றும் அவ்வாறு காலம் கடந்து தாக்கல் செய்யும் போது அதற்கான சரியான காரணத்தை குறிப்பிட்டு மனு தாக்கல் செய்யப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த தொழிற்தகராறு வழக்கில் எதிர்மனுதாரர் தரப்பில் பதில்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும் இன்னும் இறுதி உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை. மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லை என்ற காரணத்தினால் கோரிக்கை மனுவை தாக்கல் செய்வதற்கான தகவலை வழக்கறிஞரிடம் உரிய காலத்தில் தெரிவிக்க முடியவில்லை என்ற மனுதாரரால் காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது. வழக்கு இன்னும் இறுதி முடிவு காணாமல் நிலுவையில் உள்ள போது ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 15 நாட்களுக்குள் தான் மனு தாக்கல் செய்திருக்க வேண்டுமென்ற ஆட்சேபனை சரி அல்ல. வழக்கு நிலுவையிலுள்ள காணத்தினாலும், வழக்கில் தாக்கல் செய்யப்பட வேண்டிய கோரிக்கை மனுவை மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள காரணத்தினாலும், வழக்கு இருதரப்பினரையும் விசாரித்து தகுதியின் அடிப்படையில் முடிவு காணப்பட வேண்டும் என்பதே நீதி நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்ற காரணத்தினாலும், இந்த மனுவை அனுமதிக்கப்படுவதால் எதிர்மனுதாரர் தரப்பிற்கு எந்த குந்தகமும் ஏற்பட வாய்ப்பில்லை என்பதால் மனுவை அனுமதிக்க முடிவு செய்யப்படுகிறது.

10. எனவே மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில் இம்மனு அனுமதிக்கப்பட்டு கடந்த 11.11.2022 தேதியில் மனுதாரருக்கு எதிராக அளிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவு ரத்து செய்யப்படுகிறது.

முடிவாக இம்மனு அனுமதிக்கப்படுகிறது. கடந்த 11.11.2022 தேதியில் மனுதாரருக்கு எதிராக அளிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் உரைக்கப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எழுதி விரிவாக்கம் செய்து கணினி மூலம் தட்டச்சு செய்ததை பிழை திருத்தம் செய்து இன்று 2023ம் ஆண்டு ஜூலை மாதம் 13ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- P.சிவஞானம்,
தலைமை தாங்கும் அலுவலர்,
தொழிலாளர் நீதிமன்றம்,
காஞ்சீபுரம்.

// உண்மை நகல் //

P SIVAGNANAM

Presiding Officer,
Labour Court
Digitally signed by P SIVAGNANAM
Location: Kancheepuram
Date: 2023.07.14 16:56:14 +0530

தலைமை தாங்கும் அலுவலர்,
தொழிலாளர் நீதிமன்றம்,
காஞ்சீபுரம்.